

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழக பட்டமளிப்பு விழாவில் ஒரு மாணவிக்கு தமிழக கவர்னர்(பொறுப்பு) வித்யாசாகர்ராவ் பட்டம் வழங்கிய போது எடுத்த படம். இந்திய விண்வெளி ஆய்வு மைய நுண்ணலை தொலையுணர்வு செயற்கை கோள் திட்ட இயக்குனர் வளர்மதி, பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் முத்துக்குமார் ஆகியோர் அருகில் உள்ளனர்.

### பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடந்த விழாவில்

# 614 மாணவ- மாணவிகளுக்கு பட்டம்

## கவர்னர் வித்யாசாகர் ராவ் வழங்கினார்

திருச்சி,அக்.15–

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நடந்த பட்டமளிப்பு விழாவில் 614 மாணவ- மாணவிகளுக்கு பட்டங்களை கவர்னர் வித்யாசாகர் ராவ் வழங்கினார்.

திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் 33–வது பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக பட்டமளிப்பு விழா அரங்கில் நேற்று நடைபெற்றது. விழாவுக்கு தமிழக கவர்னர் (பொறுப்பு)வித்யாசாகர் ராவ் தலைமை தாங்கி மாணவ-மாணவிகளுக்கு பட்டங்களையும், பல்கலைக்கழக அளவில் சாதனை படைத்த மாணவ-மாணவிகளுக்கு பதக்கங்களையும் வழங்கினார்.

### கவர்னர் பட்டம் வழங்கினார்

கணிதம், மொழிப்பாடங்கள், வரலாறு, பொறியியல் மற்றும் தொழில் நுட்பவியல், அறிவியல், வணிகவியல், கல்வியியல், மேலாண்மை துறையில் முனைவர் பட்டம், ஆய்வியல் நிறைஞர் பட்டம், இளநிலை பட்டம் என மொத்தம் 614 பேர் கவர்னரிடம் நேரில் பட்டங்களை பெற்றுக்கொண்டனர். 74 ஆயிரத்து 421 பேருக்கு பட்டங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.நிகழ்ச்சியில் பாரதிதாசன் பல்கலைக்கழக துணைவேந்தர் முத்துக்குமார் அறிக்கை படித்தார்.

### சிறப்பு விருந்தினர்

விழாவில் பெங்களூருவில் உள்ள இந்திய விண்வெளி ஆய்வு மைய நுண்ணலை தொலையுணர்வு செயற்கை கோள் திட்ட இயக்குனர் வளர்மதி சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பட்டமளிப்பு விழா உரையாற்றினார். அப்போது அவர் பேசியதாவது:–

அரசு பள்ளியில் படித்தால் சாதனை படைக்க முடியாது என்ற எண்ணம் மாணவர்களிடம் உள்ளது. இது தவறானது, நான் அரசு பள்ளியில் படித்து தான் உயர்ந்த நிலையை அடைந்து இருக்கிறேன். கடின உழைப்பு, தன்னம்பிக்கை இருந்தால் எந்த பள்ளியில் படித்தாலும் நல்ல மதிப்பெண்கள் பெற முடியும். இதன் மூலம் வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைய முடியும். பட்டம் பெறும் இந்நாள் மாணவர்களின் வாழ்க்கையில் முக்கியமான நாளாகும்.

### வித்தியாசமாக சிந்திக்க வேண்டும்

மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் அப்துல் கலாம் கனவு காணுங்கள் இளைஞர்களே, வித்தியாசமாக சிந்தியுங்கள், நாட்டின் முன்னேற்றத்திற்காக கடினமாக உழைக்க பழகிக்கொள்ளுங்கள்



முனைவர் பட்டம் பெற்ற மாற்றுத்திறனாளிகளை படத்தில் காணலாம்.

### மாற்றுத்திறனாளிகள் 6 பேர் 'முனைவர்' பட்டம் பெற்றனர்

பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் நேற்று நடைபெற்ற பட்டமளிப்பு விழாவில் கவர்னர் வித்யாசாகர் ராவ் 441 பேருக்கு 'முனைவர்' பட்டங்களை வழங்கினார். கவர்னரிடம் முனைவர் பட்டம் பெற்றவர்களில் சாதிக் அலி, புவனேஸ்வரி, மானே தனம், பெல்லார்மின் டியானா, தர்மலிங்கம், அகிலாண்டேஸ்வரி ஆகிய 6 பேர் மாற்றுத்திறனாளிகள் ஆவார்கள். இவர்களில் அகிலாண்டேஸ்வரி பார்வை இல்லாதவர். பொருளியல் துறையில் முனைவர் பட்டம் பெற்ற புவனேஸ்வரி திருச்சி ஈ.வெ.ரா. பெரியார் கல்லூரியில் பேராசிரியையாக பணியாற்றி வருகிறார். தனது இரண்டரை வயதில் ஏற்பட்ட போலியோ நோய் பாதிப்பினால் வலதுகை மற்றும் இடது கால் செயல்பாடு இழந்த இவர் வாழ்க்கையை ஒரு சவாலாக எடுத்து போராடி முனைவர் பட்டம் பெற்று உள்ளார். மாற்றுத்திறனாளிகள் 6 பேரும் பல்கலைக்கழக அதிகாரிகள், மற்றும் போலீஸ் அதிகாரிகள் உதவியுடன் மேடைக்கு சென்று கவர்னர் கையால் முனைவர் பட்டங்களை பெற்றனர்.